கோகுலம்


குழந்தைகள்
மாதமிருமுறை
15-8-72
30காசு



வடிவகணிதம் சுலபமாகட்டும், புவியியல் வண்ணமயமாகட்டும்

பைதாகரஸை மிஞ்சுங்கள்; வரைபடத்திற்கு வண்ணமூட்டுங்கள்...கேம்லின் இன்ஸ்ட்ரு-மெண்ட் பாக்ஸ் மற்றும் கலர் பென்ஸில்களை உபயோகியுங்கள். முன்னது சரிநுட்பமாக உபயோகிக்கக்கூடியது. பார்ப்பதற்குக் கவர்ச்சிமிக்கது; பின்னது மென்மையான கரியம் கொண்டது. மழமழப் பானது- இரண்டும் நீடித்து உழைப்பவை. தேய்மானத்தை எதிர்க்கும் தன்மையுடையவை. சிக்கனமானவையும் கூட.

கேம்லின் உங்களுக்கென பலவகை கலைச் சாதனப் பொருள்களை வழங்குகிறது—மெழுகு க்ரேயான்கள், வாட்டர் கலர்கள், போஸ்டர் கலர்கள்—இன்னும் பலப்பல. உங்கள் அருகாமையிலுள்ள வியாபாரியிடம் கேட்டு வாங்குங்கள்.





கேம்லின்

கலர் பென்சில்களையும், இன்ஸ்ட்ரு-மெண்ட் பாக்ஸையும் வாங்குவீர்



கேம்லின் ப்ரைவேட் லிமிடெட்,
ஆர்ட் மெட்டீரியல் டிவிஷன், ஜே. பி. நகர்,
பம்பாய் 59 என்ஸ்,
இந்தியா.



ஆஹா!
என்ன இனிமை,
என்ன சுவை!
பல வண்ண
காட்பரிஸ்
மில்க் சாக்கலேட்
ஜெம்ஸ்
GEMS
ஆட்டமும்
பாட்டும்
களிப்பூட்டுமே,
காட்பரிஸ்
ஜெம்ஸ்
இனிப்பூட்டுமே!
ரூ. 1
மட்டுமே
AIYARS-C.165 TM


அடேயப்பா!
வளர்ச்சியின்
பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும்
பாதி வேலையைத்தான் செய்யும்
இன்க்ரிமின் பெறுவீர்.. உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
Lederle எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
இன்க்ரிமின்* டானிக்
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி.
இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ்–10 மிலி
10 ml.
Incremin drops LYSINE-VITAMINS
TONIC APPETITE STIMULANT



கோகுலம்

பரிதாபி, ஆடி 31
ஆகஸ்ட் 15, 1972
மலர் 1 :: இதழ் 9



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

-- பாரதியார்

சந்தா விவரம்:

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம்	ரூ. 7-00
ஆறு மாதம்	ரூ. 3·50
இலங்கை	ரூ. 9-00
(இலங்கை நாணயப்படி)	
இதர நாடுகள்	ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

□

அட்டைப்படச் சிறுமி:

நான் ஏத்தப்போற இந்தக் கொடி எத்தனை ஜோராய்ப் பறக்கும் தெரியுமா?

வண்ணப் படம்: வித்யாவ்ரதா





திருமுருக
கிருபானந்தவாரியார்

கண்ணன் தாய்க்கு வாய்க்குள் எல்லாவற்றையுங் காட்டுதல்

ஒரு நாள் அதிக தவஞ்செய்த அன்னையாகிய யசோதை கண்ணனை மடி மிசை வைத்து, அடி முதல் முடி வரை கண்ணாரக் கண்டு, தலை மயிரை நீவி, கன்னத்தைத் தடவித் தந்து, ஆனந்த வெள்ளத்தில் அழுந்தினாள்.

அப்போது அக்குழந்தை தன் பவள வாய் திறந்து புன்னகை புரிந்து கொட்டாவி விட்டது.

ஐயனுடைய மலர் வாய்க்குள் அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தையும் கண்டாள். அஷ்டதிக்குப் பாலகர்கள்; ஏழு சமுத்திரங்கள், சத்தத் திவுகள், நட்சத்திரங்கள், சூரிய சந்திரர்கள், நவக்கிரகங்கள், அஷ்டகுல பர்வதங்கள், அஷ்ட நாகங்கள், அஷ்டகஜங்கள், — தேவர்கள், மூவர்கள், முனிவர்கள், சித்தர்கள், நந்தகோபாலன் முதலியோர்கள், தன் மாளிகை முதலிய அனைத்தையுங் கண்டாள். தன் அறையும் கண்டாள், தன் மடியில் படுத்திருக்கின்ற கிருஷ்ணனையுங் கண்டாள்; திடுக்கிட்டாள்.

ஆ! ஆ! இது என்ன அதிசயம்! இந்தக் குழந்தைதான் பரம்பொருள் போலும் என்று உணர்ந்தாள். குழந்தைக்குப் பாலூட்டினாள்.

அச்சத்தால் இந்த அதிசயத்தை ஒருவருக்குக் கூறினாள் இல்லை.

நாமகரணம்

மதுராபுரியில் வாழ்கின்ற வசுதேவர், யாதவர்களுக்குப் புரோகிதராயும், குருவாயும் விளங்குகின்ற கார்கேய முனிவரை அழைத்து, ''தபோதனரே! தாங்கள் கம்சனுக்குத் தெரியாமல் கோகுலத்துக்குச் சென்று நமது குமாரர்களுக்கு ஜாதகரணம், நாமகரணம் முதலியன செய்து வைத்து விட்டு வாருங்கள்'' என்று கூறினார்.

கார்கேயர் இதனைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தார். ''கருணைக் கடலாகிய கண்ணனைக் கண்ட கண்களே கண்கள். அல்லாதவை புண்கள். நமக்கு இன்று தெய்வ தரிசனம் கிடைக்கப் போகின்றது. நமது பிறவியின் பயன் கிட்டிற்று'' என்று எண்ணி உள்ளமும் உடம்பும் பூரித்தார். ஆனந்த வெள்ளத்தில் அழுந்தினார். பட்டினி கிடந்தவன் பாலன்னத்தை உண்ண விரைந்தது போல் கோகுலம் சென்றார்.





நந்தகோபன் கார்க்கேயருடைய வரவை யறிந்து, பிரமதேவரை இந்திரன் எதிர் கொள்வது போல் எதிர் கொண்டான். கால் அலம்ப நீர், கையலம்ப நீர், உண்ணீர் ஆகியவை தந்தான். திருவடியைப் பன்னீரால் அபிஷேகம் புரிந்தான். நறுமலர்கள் தூவி வழிபாடு செய்தான். 'தங்கள் வரவினால் என்னோடு பொன்னோடு எனப் புனிதம் எய்திபது'' என்று இயம்பினான்.

கார்க்கேயர் ''நந்தகோபரே! உமக்கு எல்லா மங்களங்களும் உண்டாவதாக. உம்முடைய குழந்தைக்கும் ரோகிணியின் குழந்தைக்கும் நாமகரணம் புரிய வேண்டி வந்தேன். அதிக ஆடம்பரமாகச் செய்தல் கூடாது. கம்சன் அறிந்தால் இடர் புரிவான். கருக்கமாக மறைமுறைப்படி புரிவேன்'' என்றார்.

நல்ல நாள் பார்த்து, வீட்டைச் சந்தனத்தால் மெழுகி, மலர் மாலைகளைத் தொங்க விட்டு, கோலம் இட்டு அலங்கரித்தார்கள். ஆயர்கள் ஒன்று கூடி ஆடினார்கள், பாடினார்கள்.

ரோகிணியின் திருவுதரத்தில் பிறந்த மைந்தனுக்குப் 'பலராமன்' என்று பெயர் சூட்டினார்.

தேவகி வயிற்றில் பிறந்து, யசோதையால் வளர்க்கப் பெறுகின்ற மைந்தனுக்குக் ''கிருஷ்ணன்''என்றும் பெயர் சூட்டினார்.

கார்க்கேயர், ''நந்தகோபரே! கிருஷ்ணன் என்று உன் மகனுக்குப் பேர் சூட்டினேன். கிருஷ்ணம் என்றால் கருமை. உன் மகன் கருமேக நிறம் படைத்தவன்; ஆதலால் கிருஷ்ணன். அன்றி, என்றால் கிருஷ்தோண்டுவது. இது ஆகுபெயராய் நிலம் என்பதைக் குறிக்கும். கலப்பையால் உழுவதற்கு கிருஷி என்று பேர். எனவே கிருஷ் — நிலம்; ந—நலம்—கிருஷ்ண என்றால் நிலத்துக்கு நலஞ் செய்கிறவன் என்று பொருள். உன் மகனால் நிலமகள் நலமடைவாள். உன் மகனுக்கு ஆயிரம் ஆயிரம் பேர்கள் உள: இந்தக் கண்ணனை வழிபட்டவர்கள் இகலோகத்தில் எல்லா நலன்களையும் எளிதில் பெறுவார்கள். பரலோகத்தில் பேரின்பப் பெருவாழ்வு பெறுவார்கள். உன் குலமும் நீயும் செய்த தவப்பயனால் இப்பரம கருணை நிதியை மகனாக வளர்க்கின்றீர்கள். நான் விடைபெற்றுக் கொள்ளுகின்றேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டு மதுரை சேர்ந்தார்.

கிருஷ்ண லீலை

கிருஷ்ணர் முழங்காலை ஊன்றித் தவழ்ந்தார். அவருடைய திருவடிகளில் வேதங்களே தண்டைகளாகவும் சதங்கைகளாகவும் விளங்கி மந்திர கீதத்துடன் ஒலித்தன. திருவரையில் கிண்கிணிகள் இனிது ஒலி செய்ய மெல்ல எழுந்து நிற்பார். நிற்கவொல்லாமல் வீழ்வார். தளர் நடையிட்டு நடப்பார். பலராமரும் கிருஷ்ணரும் வீதியில் ஓடிப் புழுதி படிய விளையாடினார்கள்.

உரோகணியும் யசோதையும் குழந்தைகளை எடுத்து மடியில் வைத்துப் புழுதி துடைத்து, உச்சி மோந்து முத்தமிட்டு உள்ளம் உவந்தார்கள்.

பவள வாயில் முத்துப் பற்கள் ஒளி செய்தன. இருண்டு கருண்ட இளந்தலைமயிர்கள் முகத்தில் தவழ்ந்து அழகு செய்தன. கழுத்திலும் திருமார்பிலும் பொன் மாலைகள் பொலிந்தன. காது வரை நீண்ட கண்கள் கருவண்டுகள் போல் எழில் செய்தன. கருணை நிறைந்த கண் பார்வை அவர்களை மதுவைப் போல் மயங்க வைத்தது.


(தொடரும்)

தெரியுமா?

சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழ்நாடு பல் வேறு கட்டங்களில் முதன்மையாக நின்றிருக்கிறது. அப்படிப்பட்ட சில சந்தர்ப்பங்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதில் பங்கு பெற்றவர்கள் யார் என்று உங்களால் கூற முடியுமா, பாருங்கள்?


1. காந்திஜிக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்தது யார் தெரியுமா?
2. ஆங்கிலேயக் கலெக்டரைச் சுட்டுக் கொன்ற ஒரு வீர வாலிபன் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன். அவன் பெயர் என்ன? சம்பவம் நடந்தது எங்கே?
3. அஹிம்ஸா முறையில் உலகப் புகழ்பெற நடத்திய தமது சத்தியாக்கிரகப் போராட்டத் திட்டத்தை காந்திஜி தமிழ் நாட்டில்தான் முதன் முதலில் தீர்மானித்தார்? அது எந்த இடத்தில் - யார் வீட்டில் என்று தெரியுமா?
4. முதல் ராணுவப் புரட்சி நடந்தது எப்போது? எங்கு?
5. முதல் காங்கிரசில் முதல் தீர்மானத்தைப் பிரசுரித்தவர் யார்?
6. முதல் தேசியப் பத்திரிகையை நடத்தியவர் யார்?
7. காந்தி ஆசிரமத்தை முதலில் ஏற்படுத்தியவர் யார்?
8. தொழிலாளர்களைத் தேசியப் போரில் முதலில் ஈடுபடுத்தியவர் யார்?
9. கதர்ப் பிரசாரத்தை முதலில் ஆரம்பித்து நடத்தியவர் யார் என்று தெரியுமா?
10. ஹரிஜனத் தொண்டில் முதலில் ஈடுபட்டவரின் பெயர் என்ன?
11. கள்ளுக்கடைகளின் முன் முதன் முதலில் மறியல் செய்தவர்கள் யார் தெரியுமோ?
12. வரி கொடா இயக்கத்தில் தம் நிலத்தை முதலில் இழந்தவர் யார்?
13. நாட்டின் விடுதலைக்காகத் தூக்குமேடையில் முதலில் மாண்டவர் யார்?
14. காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்த முதல் தமிழர் யார்?
15. தமிழகத்தில் சிறை சென்ற முதல் பெண்மணி யார்?
16. தமிழகத்தில் முதலில் மதுவிலக்கு அமுல் செய்யப்பட்ட மாவட்டம் எது?
17. உண்மைச் செய்திகளை வெளியிடச் சுதேசிச் செய்தி ஸ்தாபனத்தை முதலில் ஏற்படுத்தியவர் யார்?
18. நாடக மேடை மூலம் தேசபக்தியைப் பரப்பிய முதல்வர் யார் தெரியுமா?
18. ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டு முதலில் சிறை சென்றவரும், காந்தீயத்தைத் தமிழ் நாட்டில் பரப்ப வழிகாட்டியாக இருந்து வருபவருமான முதல்வர் யார்?
20. கடல் கடந்த நாடுகளில் காந்திஜி நடத்திய அறப்போரில் பங்கு கொண்ட தமிழ் நாட்டுப் பெண்மணி யார்?

1. தில்லையாடியைச் சேர்ந்த கன்னியப்ப செட்டியார்
2. வாஞ்சி ஐயர், மணியாச்சி ரயில் சந்திப்பில்.
3. சென்னையில். இந்து சீனிவாசனின் இல்லத்தில்.
4. 1808ல் வேலூர்க் கோட்டை.
5. ஸ்ரீ. சுப்பிரமணிய அய்யர்.
6. மண்டயம் சகோதரர்கள். ஆசிரியர் பொறுப்பு, கவி பாரதியார்.
7. ப. ஜீவானந்தம், சிறுவயல் என்ற கிராமத்தில் 1920ல் ஏற்படுத்தினார்.
8. திரு வி. கலியாண சுந்தரனார்.
9. பெரியார் ஈ. வெ. ரா.
10. மதுரை வைத்தியநாதய்யர்.
11. பெரியார் ஈ. வெ. ரா.வின் முதல் மனைவி நாகம்மையும், சகோதரி கண்ணம்மாவும்.
12. விவேகசிந்தாமணி ஆசிரியர் சி. வி. சுவாமிநாதய்யர். 1928ல் வரி கொடுக்க மறுத்ததால் திருவையாற்றிலுள்ள இவரது நிலங்கள் ஏலம் விடப்பட்டன.
13. வீரபாண்டிய கட்டபொம்மன்
14. சேலம் விஜயராகவாச்சாரியார்.
15. டாக்டர் ருக்மிணி லட்சுமிபதி.
16. சேலம் மாவட்டம்.
17. சதானந்த.
18. தெ. பொ. கிருஷ்ணசுவாமி பாவலர்.
19. ராஜாஜி.
20. தில்லையாடியைச் சேர்ந்த வள்ளியம்மை அவர்கள்.

ஆத்திசூடி

ராஜாஜி



கீழ்மையகற்று

மனிதனுக்குச் சில காலங்களில் தாழ்ந்த எண்ணங்கள் உண்டாகலாம். அவைகளைக் கிட்ட நெருங்காமல் தள்ளி விட வேண்டும். பெருந்தன்மையான எண்ணங்களையும் செயல்களையுமே வளர்க்க வேண்டும். கீழான இயல்புடையவர் என்று தெரிந்தவருடன் சேராமலிருப்பதும் நல்லது. சகவாசத்தினால் கீழான எண்ணங்கள் உனக்கும் தோன்றும்.

குணமது கைவிடேல்

எந்தக் கஷ்டம் நேரிட்டாலும் உன்னுடைய நற்குணம் மாறக் கூடாது. குணமே பெருஞ்செல்வம். வேறு எதை இழந்தாலும் நற்குணத்தை இழக்கக் கூடாது. பாவச் செய்யல் செய்தாலும் அல்லது எண்ணினாலும் குணம் கெட்டுப் போகும்.

குணமது — குணத்தை

கைவிடேல்—காப்பாற்றாமல் விடாதே

கூடிப்பிரியேல்

ஒருவனுடன் சிநேகித்தாயானால் அவனைப் பிறகு விட்டு நீங்காதே. சுய நலத்துக்காகவோ, வேறு ஏதாவது ஆசைப்பட்டோ கொண்ட நண்பரை விட்டுப் பிரிந்து போவது அழகல்ல. சிநேகிதன் தவறுகள் செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். சிநேகிதர்கள் பிரிந்தால் இருவருக்கும் துன்பமுண்டாகும்.

கெடுப்பதொழி


யாதாயினுமொன்று உனக்குக் கேடு செய்வது என்று அறிந்தபின், அது எவ்வளவு பழையதாயினும், தள்ளுவது வருத்தமாயினும் தள்ளியே தீர வேண்டும்.

கேள்வி முயல்

கேள்வி — பெரியோர் சொல்லியறியும் அரிய விஷயங்கள்.

இவைகளைக் கற்க முயல வேண்டும்.








- 1929 டிசம்பர் 31ம் தேதி நள்ளிரவு 12 மணிக்கு "பூரண சுதந்திரம்" கோரி லாகூர் காங்கிரஸில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- நாடு சுதந்திரம் அடைந்தபோது 1947ம் ஆண்டு ஆகஸ்டு 14ம் தேதி இரவு 12 மணிக்கு நாடு விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டது.
- சுதந்திர தின வெள்ளி விழாவான 1972ம் ஆண்டு ஆகஸ்டு 14ம் தேதி இரவு 12 மணிக்கு நாடாளு மன்றமும், ராஜ்ய சட்டசபைகளும் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துகின்றன. ★

வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்!

"நஜன்"






சுதந்திர இந்தியாவில் பிறந்த 'கோகுலம்' வாசகர்களாகிய நீங்கள் இந்நாடு சுதந்திரம் பெற எவ்வளவு பாடுபட்டது என்பதைக் கேட்டுத்தான் இருப்பீர்கள்.

சுதந்திர தின வெள்ளி விழாக் கொண்டாடப்படும் இந்நேரத்தில் உங்களுக்கு அக்காலச் சம்பவங்களை நினைவுபடுத்தவே இக்கட்டுரை.

ஒரு நாட்டுக்கு மிகவும் துக்ககரமான நாள் அந்த நாடு அடிமைப்படும் நாளே. அந்நியர்கள் இங்கு வியாபாரம் செய்ய வந்து இந்தப் பாரத நாட்டையே கைப்பற்றி ஆண்டனர்.

ராணுவத்தினரே கொதித்தெழுந்து, புரட்சி செய்தது முதன் முதலில் தமிழ் நாட்டில்தான். எங்கு தெரியுமா?

1806ல் வேலூரில் இப்புரட்சி நடைபெற்றது. ஆனால் துரோகம் காரணமாக அப்புரட்சி தோல்வியடைந்தது.

1857ல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போரில் முதன் முதலாக உயிரை அர்ப்பணம் செய்தவர் தியாகி மங்கள பாண்டே. இவர் பீரங்கி வாயில் வைத்துச் சுடப்பட்டார்.

அந்நிய ஆதிக்கத்தைத் தீவிரமாக எதிர்த்து நின்றது திருநெல்வேலிச் சீமைதான். கட்டபொம்மன், மருது சகோதரர்கள், பூலித்தேவன், வேலுநாச்சியார் ஆகியோர் கப்பம் கட்ட மறுத்து உயிரையே விட்டவர்கள்.

சுயராஜ்யம் என்ற சொல்லை முதன் முதலில் உபயோகித்தவர் தாதாபாய் நவரோஜி. இவர் காமன்ஸ் சபையிலேயே உறுப்பினராகி இந்தியாவுக்கு நியாயம் வழங்கப் பாடுபட்டவர்.

நமக்காக எவ்வளவோ அயல்நாட்டு நண்பர்கள் பாடுபட்டிருக்கின்றனர். ஆண்ட்ரூஸ், அன்னிபெஸண்ட் போன்ற பெயர்களை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் நமக்குப் பரிந்து பேசிச் சிறை சென்ற முதல் பிரிட்டிஷ்காரரை உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்காது. அவர் பெயர் ஆல்ட்ரெட். லண்டனில் கிருஷ்ணவர்மா என்கிற புரட்சியாளர் நடத்திய பத்திரிகையை அச்சிடுபவர் என்ற காரணத்தினால் இவரைச் சிறையில் அடைத்தனர். பிரின்ஸ்டன் சிறையில் இவர் சாவர்க்காருடன் இருந்தவர்.


இந்தச் சுதந்திரம் கிடைக்கப் பல வழிகளில் முயற்சி செய்யப்பட்டன.

முதல் வழி: பிரிட்டிஷ்காரர்கள் நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள். அவர்களிடம் சுமுகமாகவே இருந்து சுதந்

பட விளக்கம் கீழிருந்து மேலாக:

1. அன்னிபெஸன்ட். 2. லஜபதிராய். 3. தாதாபாய் நௌரோஜி. 4. திலகர். 5. காந்திஜி. 6. சுபாஷ் சந்திரபோஸ். 7. மோதிலால் நேரு. 8. கோகலே.









திரத்தைப் பெற்றுவிடலாம் என்ற கருத்தைக் கொண்டவர்கள் கோபால கிருஷ்ண கோகலே, பிரோஸ்ஷா மேத்தா, தாதாபாய், மகாகனம் சாஸ்திரியார் போன்றவர்கள் இதில் முக்கியமானவர்கள். சட்ட வரம்புக்குட்பட்டுச் சுதந்திரம் கிடைக்கும் என்று கனவு கண்டவர்கள் இவர்கள்.

கோகலே மிதவாதிதான் என்றாலும், நாட்டில் கௌரவத்தையும், அரசியல் நேர்மையையும் எப்போதுமே விட்டுக் கொடுக்காதவர். உப்பு வரியை முதன் முதலில் எதிர்த்தவர் இவரே.



இரண்டாவது வழி : ''மயிலே மயிலே என்றால் இறகு போடாது; பிடுங்கி எடுக்க வேண்டும்'' என்கிற கொள்கையுள்ள புரட்சிவாதிகள். இவ்விதி தவறு என்பது இதைப் பின்பற்றுபவர்களுக்குத் தெரியாததல்ல. ஆனால் எவ்வழியிலாவது சுதந்திரம் பெற வேண்டியதே முக்கியம் என்பதே இவர்கள் எண்ணம்.

நம் நாட்டில் நம்மை ஆண்டு கொண்டே நம்மை அடிமைகளாக நடத்துவது, நாட்டின் செல்வத்தைச் சுரண்டிச் செல்வது இவை எல்லாம் மக்களிடையே பெரும் மனக் கொதிப்பை ஏற்படுத்தின. இக் கொள்கையுடையவர்களையும் இரண்டாகப் பிரிக்கலாம். திலகர், அரவிந்தர் லாலா லஜபதி, வ. உ. சிதம்பரம், சிவா போன்றவர்கள் தீவிரவாதிகளே.



மற்றொரு வகையினர் புரட்சிவாதிகள். இவர்களுக்கு உயிர், பொருள், ஆவி எதுவும் ஒரு பொருட்டல்ல. வீர சாவர்க்கர், வ. வே. சு. அய்யர், கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டு வீழ்த்திய வாஞ்சி அய்யர், மதன்லால் திங்ரா, பகத்சிங் போன்றவர்கள். இவர்கள் ஒவ்வொருவரது வரலாறும் மயிர்க்கூச்செறியச் செய்யும். கப்பலின் ஒரு சிறு வட்டத் துவாரத்தின் மூலம் கடலில் தப்பி மீண்டும் கைதாகி அந்தமான் சிறையில் அநேக ஆண்டுகள் வாடி வதங்கிய சாவர்க்காரின் வாழ்க்கை போன்றதே ஒவ்வொருவருடையதும்.



மூன்றாவது வழி: அயல்நாட்டு அரசாங்கங்களின் உதவி பெற்று இந்தியாமீது படையெடுத்து மீட்பது. செண்பகராமன் பிள்ளை எம்டன் கப்பலிலேயே வந்து குண்டு வீசச் செய்தார். ராஜா மகேந்திர பிரதாப் காபூலில் போட்டி இந்திய அரசை அமைத்தார். சுபாஷ் சந்திரபோஸ் அயல்நாட்டு உதவியை நாடிய போதிலும் இந்தியாவின் கௌரவத்துக்கு ஹானி நேராத வகையில் ஆஜாத் ஹிந்த் அரசை நிறுவி இந்திய தேசிய ராணுவத்தைக் கொண்டு படையெடுத்தார். இவர் முயற்சியும் வெற்றியடையவில்லை.

நான்காவது கடைசி வழி : காந்திய வழி. காங்கிரஸ் ஸ்தாபனம் ஆரம்பத்தில் மண்டியிட்டுச் சுதந்திரத்துக்கு மனுப் போட்டுக் கொண்டிருந்தது. திலகர்தான் 'சுதந்திரம் நமது பிறப்புரிமை' என்கிற தாரக மந்திரத்தைக் கொடுத்துத் தன்மானத்துக்கு வழி செய்தார். இந்திய அரசியலில் காந்திஜி பிரவேசித்த பின்தான் மக்களிடையே அரசியல் விழிப்பு பரவலாக ஏற்பட்டது.

மந்திர சக்திக்குக் கட்டுப்படுவதுபோல் பல தலைவர்கள் தங்கள் செல்வம், சுக வாழ்க்கை எல்லாவற்றையும் தியாகம்



மேலிருந்து கீழாக

9. தீனபந்து ஆண்ட்ரூஸ். 10. சீனிவாச சாஸ்திரியார். 11. அரவிந்தர். 12. நேருஜி. 13. சாவர்க்கர். 14. பிரகாசம். 15. ஜி. சுப்பிரமணிய அய்யர். 16. சுப்பிரமணிய சிவா.





17. பாரதியார். 18. ராஜாஜி.
19. வ. உ. சிதம்பரம் பிள்ளை.
(கீழே) 20. வ. வே. ரா.

21. திரு. வி. க.
22. ப. ஜீவானந்தம்.
23. வ. வே. சு. அய்யர்.

செய்து சுதந்திரப் போரில் குதித்தனர். பண்டித மோதிலால் நேருவின் தியாகம் வருணிக்க முடியாதது.

ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் நடைபெற்ற (1929) லாகூர் காங்கிரஸ் தான் பூரண சுதந்திரத் தீர்மானத்தை நிறைவேற்றியது. பின்னர் சுதந்திர நாட்டின் பிரதம மந்திரியாக இருக்கப் போகிறவரே சுதந்திரத் தீர்மானத்தை நடத்தி வைக்க நேர்ந்தது எவ்வளவு பொருத்தம்?

காந்திஜியின் ஒவ்வோர் இயக்கத்திலும் அவருக்கு ஒவ்வொரு தலைவர்கள் சீடர்களாயிருக்கின்றனர். சம்பரான் மூலம் கிடைத்தவர் ராஜன்பாபு. கெய்ரா, பர்த்தோலி சத்தியாக்கிரகம் மூலம் கிடைத்தவர் சர்தார் படேல்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபடும்போது முகம்மதலி, ஆஜாத், அஜ்மல்கான், கிச்சிலு, சையத் முகம்மது, ஹஸன், இமாம் போன்றவர்கள் காந்திஜியின் சீடர்களாயினர்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் காமராஜ் அவர்களின் தியாகமும் சேவையும் யாராலும் மறக்கமுடியாது. பிற்காலத்தில் அவரைப் பாரதமே காலா காந்தி என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது. தம் பேச்சு வன்மையால் எதிரிகளைத் திணற அடித்தவர் திரு சத்தியமூர்த்தி அவர்கள். இவர் காமராஜரின் குரு.

நாட்டின் விடுதலைக்கு மட்டுமின்றி நமது சமூக, பொருளாதார சூழ்நிலைகளையும் களைய மகாத்மா வழி வகுத்தார். தமிழ்நாடு காந்தியத்துக்குப் பெரும் ஒத்துழைப்பு தந்ததற்குக் காரணமே ராஜாஜிதான்.

காந்தி நடத்திய ஒவ்வொரு சத்தியாக்கிரகத்திலும் தமிழ்நாடு முன்னணியில் நின்றிருக்கிறது. ராஜாஜி தலைமையில் நடைபெற்ற வேதாரண்ய உப்பு சத்தியாக்கிரகம் சரித்திரத்தில் மிக முக்கியம் பெறும் அளவுக்குப் பிரபலமடைந்தது.

பிரிட்டிஷார் கையில் அதிகாரம் இருக்கும் வரை விமோசனம் ஏற்படாது என்பதைக் காந்திஜி உணர்ந்தார்.

பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்ற (1942) இயக்கம் பிறந்தது. தலைவர்கள் எல்லோரையும் கைது செய்யவே நாடே கொதித்தெழுந்தது. இந்த இயக்கத்தின் எதிரொலியாகவேதான் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறும்படி நேர்ந்தது.

வீறுகொண்ட மக்களை எவ்வளவு காலம் ஒடுக்க முடியும்? பிரிட்டனில் தொழிற்கட்சி மந்திரி சபை இந்தியாவுக்குச் சுதந்திரமளிக்க முடிவு செய்தது. பாரத நாட்டைப் பிரிவினை செய்வதைக் காந்திஜி உள்படப் பல தலைவர்கள் விரும்பவில்லை. இருந்தாலும் இதற்கு உட்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டது.

கடைசியில் சுதந்திரம் கிடைத்தது.

நூறு ஆண்டு காலப் போராட்டம், எவ்வளவோ உயிர்த் தியாகம், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம். இவ்வளவுக்குப் பின்தான் சுதந்திரம் கிடைத்தது!

பாரதியார் அன்று,

" தண்ணீர்விட்டோ வளர்த்தோம்...
கண்ணீரால் காத்தோம் "

என்று பாடினார். கண்ணீரையும் ரத்தத்தையும் நாட்டுக்களித்த தியாகிகள் எண்ணற்ற பேர். இதில் தமிழ் நாட்டுக்குக் கணிசமான பங்கு உண்டு.

நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்க எவ்வளவு பாடுபட்டோம் என்பதை அறிந்தால் தான் அந்தச் சுதந்திரத்தை எவ்வளவு அருமையாகப் பாதுகாக்க வேண்டும் என்பது புலப்படும்!










வேண்டுகிறேன் இறைவா!

பி. ஆர். எஸ்.

அன்புடை உள்ளம் வேண்டும்
அடக்கமே கொள்ள வேண்டும்
எண்ணத் தூய்மை வேண்டும்
எங்கும் அமைதி வேண்டும்.

நல்லவர் வாழ வேண்டும்
நன்மைகள் அடைய வேண்டும்;
இல்லம் மகிழ வேண்டும்
இன்பம் பெருக வேண்டும்

நன்றியைப் போற்ற வேண்டும்
நன்றே உழைக்க வேண்டும்
உண்மையே பேச வேண்டும்
ஒற்றுமைப் பண்பு வேண்டும்

நல்லவை எண்ணல் வேண்டும்
நல்லவர் நட்பு வேண்டும்
சொல்லினில் இனிமை வேண்டும்
சொற்படி நடக்க வேண்டும்

பட்டாம்பூச்சி!

தமிழழகன்

பட்டாம் பூச்சி
பறக்குதாம்!
பறந்து கொண்டே
இருக்குதாம்!
தொட்டால் வர்ணம்
ஒட்டுதாம்!
துவண்டு இறகை
வெட்டுதாம்!
விட்டால் போதும்
ஓடுதாம்!
விரும்பிப் பூவை
நாடுதாம்!
எட்டா உயரே
பறந்ததாம்!
எங்கோ எங்கோ
மறைந்ததாம்!





ஒலிம்பிக் விளையாட்டுகள்

உலகில் உள்ள நாடுகள் பலவற்றி லிருந்தும் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் ஓர் இடத்தில் கூடித் தங்கள் திறமைகளை வெளிக் காட்டும் போட்டி களில் ஈடுபடும் நிகழ்ச்சிதான் ஒலிம்பிக் விளையாட்டு. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். ஒவ்வொரு தடவையும் ஒரு நாட்டில் இந்த விளை யாட்டு விழா நடைபெறுகிறது.

1960ம் ஆண்டு ரோம் நகரில் நிகழ்ந் தது. 1964ல் டோக்கியோவிலும், 1968ல் மெக்ஸிகோ நாட்டிலும் நடந் தன ஒலிம்பிக் விளையாட்டுக்கள். 1972ல் இம்மாதம் ம்யூனிக்கில் நடைபெற விருக்கிறது. ஒலிம்பிக் விளை யாட்டுக்களுக்குத் தனியான ஒரு கொடி உண்டு. அது எப்படி இருக்கும் தெரி யுமா? ஐந்து வளையங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்ததுபோல் இருக்கும். ஒவ்வொரு வளையமும் ஒவ்வொரு வண் ணத்தில் இருக்கும் — வெண்மையான பின்புலனில். இதன் தத்துவம் என்ன? இந்த மகத்தான விழாவில் ஐந்து கண் டத்து மக்களும் ஒற்றுமையாகக் கூடிச் செயல்பட வேண்டும் என்பதை இணைந் துள்ள வளையங்கள் வற்புறுத்துகின்றன.

ஐம்பதுக்கும் மேலான நாடுகள் ஒலிம்பிக்கில் எல்லா விளையாட்டுக்களி லும் கலந்து கொள்ளுகின்றன. ஓட்டம், தாண்டுதல், சைக்கிள், நீந்துதல், குத்துச் சண்டை, ஈட்டி எறிதல், மல் யுத்தம், வாட்போர், கனம் தூக்குதல், குதிரை ஓட்டம், படகு வலித்தல் — இப் படி உடல் வலுவைக் காட்டும் விளை யாட்டுக்களின் பட்டியல் தடவைக்குத் தடவை அதிகமாகிக் கொண்டே போகி றது. ஒவ்வொரு விளையாட்டுப் போட்டியிலும் முதலாவதாக, இரண்டாவதாக, மூன்றாவதாக வருபவர்களுக்குத் தங்கம், வெள்ளி, வெண்கலத்தாலாகிய பதக்கங்களை வழங்கிக் கௌர விப்பார்கள். மூன்று பரிசுக ளுக்கு மேல் வேறு எதுவும் கொடுப்பது கிடையாது.

ஒலிம்பிக் விளையாட்டுக்களின் பிறப் பிடம் கிரேக்க நாடு (கிரீஸ்). இங்கிருந்து ஏற்றப்பட்ட ஜோதியை ஏந்தியபடி ஒருவர் கிளம்புவார். அங்கங்கே குறிப் பிட்ட இடங்களில் தயாராக உள்ள மற்றவர் அதைப் பெற்றுக் கொண்டு பந்தய மைதானத்தை நோக்கி விரை வார். இப்படிப் பல கைகள் மாற்றி, ஜோதியைக் குறிப்பிட்ட தினத்தன்று பந்தயம் நடக்கும் இடத்துக்குக்கொண்டு வருவார்கள். அதன் பிறகே விளை யாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகும்.

கிரீஸிலிருந்து கிளம்பும் இந்த ஜோதி வழியில் எந்த இடத்திலும் அணைந்து விடாமல் பாதுகாத்து வருவார்கள். விளையாட்டு விழா நடக்கும் அத்தனை நாட்களிலும் இந்த ஜோதி எரிந்து கொண்டே இருக்கும். இதன் நோக்கம் ஒலிம்பிக் ஆண்டு முழுவதும் உலகில் சமாதானம் நிலவ வேண்டும் என்ப தாகும்.


முதன் முதலில் ஒலிம்பிக் விளை யாட்டுக்கள் எப்போது ஆரம்பமாயின என்று தெரியவில்லை. ஆனாலும் கி.மு. 776ம் ஆண்டில் கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியா என்ற மைதானத்தில் விளை யாட்டு விழாக்கள் நடைபெற்றிருப்ப தற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. புராதன கிரேக்கர்களின் தலைமைக்



கடவுளான சீயஸை மகிழ்விக்க இந்த வகைய விளையாட்டு விழாக்களை நடத்தி யிருக்கிறார்கள்.

அந்தக் காலங்களில் முக்கியமான ஐந்து நிகழ்ச்சிகளே—ஓடுதல், தாண்டிக் குதித்தல், வட்டு, ஈட்டி எறிதல், மல் யுத்தம் ஆகியவையே — போட்டியில் இடம் பெற்றிருந்திருக்கின்றன. வெற்றி பெற்றவர்களின் தலையில், கிரேக் கர்கள் புனிதமாகக் கருதும் ஆலிவ் மரத் தின் இலைகளினாலான கிரீடத்தைச் சூட்டு வார்கள். இதுவே விளையாட்டு வீரன் பெறும் மகத்தான பரிசு. வாலிபர் களுக்கும் பையன்களுக்கும் தனித் தனியான போட்டிகள் இருந்தன.







ஆதி ஒலிம்பிக் போட்டிகளைப் பார்க்கக்கூடப் பெண்களுக்கு அனுமதி கிடையாது. ஒலிம்பிக் போட்டிகள் முழுக்க முழுக்க ஆண்களுக்குத்தான் என்றிருந்தது அந்தக் காலத்தில். இப்போது அப்படி இல்லை.

கி. பி. 394ல் மன்னர் தியோடோசியஸ் ஒலிம்பிக் விளையாட்டுக்களை விளையாடக் கூடாதென்று தடை விதித்தார். ஏனென்றால் இவ் விளையாட்டுகள் சியஸ் கடவுளை வணங்குவதாக அமைந்திருந்ததே காரணம். தியோடோசியஸ் கிறிஸ்து மதத்தவர். அவருக்குக் கிரேக்கக் கடவுளர்களிடம் நம்பிக்கை கிடையாது.

இதன் பிறகு 1500 வருடங்களுக்கு உலகிலே விளையாட்டு வீரர்களுக்கான விழாவே நடைபெறவில்லை. பிறகு ஒலிம்பிக் விளையாட்டுக்களை மறுபடியும் செயலுக்குக் கொண்டு வந்தது யார்? ஒரு பிரெஞ்சுக்காரர். பாரன் பியரி ட கோர்பெர்ட்டின் (Baron Pierre De Courbertin) என்பவர் (1863—1937) கிரேக்கர்களின் வீர விளையாட்டு விழாவை மறுபடியும் நடத்தலாம் என்று கருத்துத் தெரிவித்தார். மறைந்து போன ஒலிம்பிக் மறுபடி 1896ல் ஏதென்ஸ் நகரில் தொடங்கப்பட்டது. அதிலிருந்து உலகின் ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் விழா நடைபெற்று வருகிறது. உலகில் யுத்தம் நிகழுமானால் இவ்விழா நடத்தப்படுவதில்லை.

இவ்விளையாட்டுக்களில் பெண்களும் கலந்து கொண்டது 1922ம் ஆண்டிலிருந்துதான். இன்று பெண்களுக்கு என்று தனியான பல விளையாட்டுப் பிரிவுகள் ஒலிம்பிக் விழாவில் உண்டு. மாரிக் கால ஒலிம்பிக் விளையாட்டுக்களை 1924ம் ஆண்டு முதல் தொடங்கியிருக்கிறார்கள்.

ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் இடம் பெறும் எல்லாரும் அமெச்சூர்கள் தான். அதாவது இதில் பங்குபெறுபவர்களுக்கு ஊதியமாக எதுவும் தரப்படமாட்டாது. உண்மையான விளையாட்டு வீரலின் உற்சாகத்தோடு இதில் கலந்து கொள்ளுவதாகச் சபதம் எடுத்துக் கொண்ட பிறகே விழாவில் பங்கு பெற முடியும். ட கோர்பெர்ட்டினுடைய ஒலிம்பிக் விளையாட்டுப் பொன் மொழியே இது தான்: ஒலிம்பிக் விளையாட்டுக்களின் குறிக்கோள்: வெற்றி பெறுவதல்ல; அதில் பங்கு கொள்ளுவதே.



தங்கள் நாட்டின் பிரதிநிதியாக ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்கு பெறுவதையே விளையாட்டு வீரர்கள் கௌரவமாகக் கருதுகின்றார்கள். ஒரு விளையாட்டு வீரர் மற்ற நாட்டு விளையாட்டு வீரர்களோடு பழகி நட்புகொள்ளும் இந்த முறையினால் உலகின் பல நாடுகளிடையே ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறார்கள். உலக ஒருமைப்பாட்டை ஒலிம்பிக் விளையாட்டுக்கள் உண்டாக்கட்டுமே.

- வி. கே.



தொழிலுக்குத் தடை

'அருந்ததி'



அமராபுரியின் அரசன் நீதி நியாயம் இரண்டையும் நிலைநிறுத்தி ஆண்டு வந்தான். தினம் தினம் மாறு வேஷம் போட்டுக் கொண்டு முன் இரவு நேரத்தில் நாட்டின் நிலைமையை அறிவது அவன் வழக்கம். பக்கிரியைப் போன்று ஏழையாக அவன் சுற்றுவான்.

இவ்வாறு நடந்து வரும் காலத்தில் ஒரு நாள் சின்னஞ் சிறு குடிசைக்குள்ளிருந்து மங்கலான விளக்கொளி தெரிந்தது. குடிசைக்குள் ஒரு கிழவன் உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்தான். அவனை அணுகி, ''ஐயா! விருந்தொன்று வருகிறது'' என்றான் அரசன்.

''என்ன தவம் செய்தேனோ. வருக, வருக, சேர்ந்து உண்ணலாம் வாருங்கள்'' என்று வரவேற்றான் கிழவன்.

''இளைப்பாற வந்தேன்'' என்றான் ஏழைப் பக்கிரி. இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். ''உன் தொழில் என்ன? உன் ஜீவனம் எப்படி?'' என்று கேட்டான் மாறு வேடத்தில் இருந்த அரசன்.

''என் ஜீவனம் மிகவும் சிறந்த ஜீவனம். நான் செருப்புத் தைக்கிறவன். கிடைத்த பணத்துக்கு மகிழ்ச்சியுடன் உண்ணுகிறேன்; உறங்குகிறேன்.''

''நாளைக்கு என்ன செய்வாய்?''

''நாளைக்கு வேண்டியதை ஆண்டவன் தருவான்.''

இருவரும் சில நாழிகை பேசிக் கொண்டிருந்தார்கள். பக்கிரி விடை பெற்றான். அரண்மனை திரும்பிய அரசன் உத்தரவு ஒன்று போட்டான். ''செருப்புத் தைக்கும் தொழிலை அரசாங்கம் தடை செய்கிறது'' என்று அறிவிக்கச் செய்தான். அன்று மாலை குடிசையை நோக்கிப் பக்கிரியாகப் போனான் மன்னன். அங்கு ஆனந்தமாகக் கூழ் அருந்திக் கொண்டிருந்தான் கிழவன்.

''இன்றையப் பொழுது எப்படிக் கழிந்தது?''


''இன்றைக்குக் காலையில் தொழில் செய்யப் போனால் செருப்புத் தொழில் அரசரால் தடை செய்யப்பட்டிருந்தது. உடனே சில வீடுகளுக்குத் தண்ணீர் சுமந்து போனேன். கூலி கிடைத்தது. பொழுதும் இனிமையாகக் கழிந்தது'' என்றான் கிழவன்.

''நாளைக்கு அரசர் தண்ணீர் தூக்கும் வேலையைத் தடை செய்தால் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டான் பக்கிரி.

செருப்புத் தொழிலாளி, ''ஆண்டவன் வழிகாட்டாமலா போவான்?'' என்றான். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடைபெற்றான் மன்னன்.

மறு தினம் தண்ணீர் சுமக்கும் வேலை தடை செய்யப்பட்டது. அதே தினம் மாலை குடிசைக்குள் வந்தால் கிழவன் வழக்கம்போல் ஆனந்தமாகவே இருந்தான். அன்றைப் பொழுதில் 'என்ன நடந்தது?' என்று பக்கிரி கேட்டான்.

''இன்றைக்கு விறகு வெட்டினேன். என்பாடு கழிந்தது'' என்றான் கிழவன்.



"நாளைக்கு அதற்கும் தடை உத்தரவு வந்தால் என்ன செய்வாய்?"

"ஆண்டவன் விட்ட வழி" என்றான் கிழவன். பொழுது விடிந்தபோது விறகு வெட்டும் வேலைக்குத் தடை போட்டு உத்தரவு வந்திருந்தது.

'விறகுவெட்டிகளெல்லாம் அரண்மனைக் காவலர்களாகச் சேர்க்கப்படுவார்கள்' என்றும் அரசர் உத்தரவு பிறப்பித்திருந்தார். புதிய காவலர்களான விறகுவெட்டிக்குக் குத்து வாள் ஒன்றும் கொடுக்கப்பட்டிருந்தது.

செருப்புத் தொழிலாளி அரண்மனைக் காவலாளியாகி அன்றைய வேலையை முடித்துக்கொண்டு வீடு திரும்பும்போது தனது குத்துவாளை அடகு வைத்தான். பணம் பெற்றான். வீடு திரும்பினான். வீட்டுக்கு வந்ததும் குத்துவாளைப் போல் மரத்தினால் செய்து அதை இடுப்பிலிருந்த வாள் உறையில் செருகிக்கொள்ள முடிவு செய்தான். அன்றைக்குத் தேவையான உணவை வாங்கி வந்தவன் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது பக்கிரி வந்தான். "இன்றைக்கு என்ன வேலை செய்தாய்?" என்று கேட்டான்.



"விறகு வெட்டிகளை அரண்மனையின் காவல் படையில் சேர்த்து விட்டார்கள். இன்றைக்கு உணவு இல்லை. என் இடுப்பு வாளை அடகுவைத்த காசுக்கு உணவு வாங்கி உண்ணுகிறேன். இதற்குப் பதிலாக மரத்தால் செய்த வாளை இடுப்பில் வைத்துக் கொள்ளுவேன்."

"நாளைக்கு அரண்மனையில் பரிசோதனை நடந்தால்?"



"ஆண்டவன் விட்ட வழி" என்றான் கிழவன். பக்கிரியும் சிறிது நேரம் பேசி விட்டுப் போய்ச் சேர்ந்தான்.

மறுதினம் செருப்புத் தொழிலாளியான காவலனின் முன்னால் ஒருவனைக் கொண்டு வந்து நிறுத்தினான் தலைமைக் காவலன். "இதோ இவன் ஒரு குற்றவாளி. இவனைக் கொல்வது உன் கடமை. இது ராஜ உத்தரவு" என்றான்.

செருப்புத் தொழிலாளி, "ஐயோ! நான் இதுவரை யாரையும் கொன்று பழக்கமில்லை. நான் இதைச் செய்ய மாட்டேன்" என்றான்.

"நீ அரச ஊழியன். ஆகவே அவரது ஆணைக்குக் கட்டுப்பட்டவன். செய்து முடி" என்று கோபமாகக் கூறினான் தலைமைக் காவலன்.

கொலைத் தண்டனையைக் காண அரண்மனை வாசலில் பெருங் கூட்டம் நின்றது. கொலைக்கு உரியவனும் அங்கே நின்று கொண்டிருந்தான். செருப்புத் தொழிலாளி அந்தக் கூட்டத்தின் முன்னே வந்து நின்று கூட்டத்துக்கு வணக்கம் செய்தான்.

"பெரியோர்களே, நல்லவர்களே! எல்லாப் பொறுப்புக்கும் ஆண்டவனே காரணம். நான் கொலையாளி இல்லை. நான் ஆண்டவனின் கருவி. இந்தக் குற்றவாளி இறந்துவிட வேண்டுமென்றால் என் குத்துவாள் இரும்பாக இருக்கட்டும். இவன் குற்றமற்றவன் என்றால் என் குத்துவாள் மரக்கட்டையாக இருக்கட்டும். ஆண்டவனே! இதனை நீயே முடிவு செய்" என்று கூட்டத்தையும் வணங்கி, வானைப் பார்த்துத் தொழுது இடுப்பு வாளை உருவினான்.

அந்த வாள் உறையில் இருப்பது நிஜக் குத்துவாளில்லையே. மரத்தினால் செய்தல்லவா வைத்துக் கொண்டிருக்கிறான் அந்தக் கிழவன்!


கூட்டம் வியந்தது. "அவன் குற்றமற்றவன், குற்றமற்றவன். விடுதலை செய்க" என்று ஆர்ப்பரித்தது.


அரசன் அந்தக் கிழட்டுத் தொழிலாளியைத் தன் அருகில் அழைத்தான். அவனைத் தழுவிக் கொண்டான்.

"இன்று முதல் நீ அரண்மனையில் என் ஆலோசகர்களில் ஒருவன். நான்தான் உன்னிடம் பக்கிரியாக வந்தவன்" என்று சிரித்தபடி கூறினான் அரசன்.



வீராதி வீரன்
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
9
இந்திய மாலுமிகளின் நாய் கட்டவிழ்த்துக் கொண்டு கரையை நோக்கி வருவது தெரியாத ரஹீம் தன் வீரர்களுடன் பதுங்குமிடத்துக்கு விரைந்து கொண்டிருந்தான்...
கரையேறிய பின் தொடர்ந்து வந்த புதிய நாய் திடீரென்று ரஹீமின் ஜிம்மி மீது பாய்ந்தது.
அவர்கள் நாயல்லவா? தப்பி வந்து விட்டது. இன்னும் பகைமை மாறவில்லையா?
போதும், குரைப்பதை நிறுத்துங்கள். எதிரிகளின் காதில் விழுந்தால் தொலைந்தோம்.
ஆனால் ரஹீமின் எச்சரிக்கை எடுபடவில்லை..
அதோ அந்தப் பயல் தான். நம்மை எத்தனை நாட்களாக ஏமாற்றிக் கொண்டு வருகிறான்!
ரஹீம் நாய்களின் சண்டையை விலக்கிவிட்டு விறதிக்குப் போக முற்படும் போது ஒரு பாகிஸ்தானிய வீரனின் துப்பாக்கி அலறியது. ரஹீம் நகர்ந்து கொள்ள புல்லட் சுவர் முனையில் தாக்கி அதன் தூள்கள் சிதறிய போது புதிய நாய் தாக்குண்டு சுருண்டது.
புதிய நாயை அவன் விரும்பவில்
அதனால் ரஹீமுக்குத் தொல்லை தா
ஆனாலும் காயம்பட்ட நிலையில் ஒரு
வாயில்லா ஜீவனை அப்படியே விட்
டுச் செல்லவும் மனமில்லை அவனுக்


மறுபடியும் அந்தப் பாகிஸ்தானிய வீரர்கள் சூழுவதற்குள் அவர்கள் பார்வையிலிருந்தே தப்பி விட வேண்டும்.
நாயைத் தூக்கிக் கொண்டு ஓடுவது சிரமமாகத்தானிருந்தது. விரோதிகள் நெருங்கிக் கொண்டிருந்தனர்.
இனி ஓடிப் பயனில்லை. இந்தத் திறந்த கேட் வழியே உள்ளே புகுந்து விடுகிறேன். பிறகு அல்லா விட்ட வழி.
யா, அல்லாஹ்! உன் கருணையே கருணை. இது பாகிஸ்தானியர்களின் ஆயுதக் கிடங்கல்லவா? ஆ! இதோ கிரானேட் கைக்குண்டு! இந்த ஆயுதங்கள் அத்தனையும் என் நாட்டு மக்களைக் கொல்லுவதற்காக அல்லவா குவித்து வைத்திருக்கிறார்கள், பாவிகள்!
ரஹீம் தன் தோழர்களைப் பாதுகாப்பான இடத்தில் பதுக்கிறான். பிறகு ஒரு கைக்குண்டை எறிந்தான்.
ஒரே செயலில் இரண்டு காரியங்கள். உங்களையும் இந்த ஆயுதங்களையுமே அழித்து விடுகிறேன்.
கைக்குண்டு தன் வேலையைக் கச்சிதமாகச் செய்தது. அதிர்ச்சி அடங்கிச் சுற்று முற்றும் பார்த்த ரஹீமுக்குப் பகீர் என்றது. அவன் அருமை ஜிம்மியைக் காணவில்லை.
ஜிம்மி, ஜிம்மி.. ஐயோ, இடிபாடுகளில் நீ சிக்கிக் கொண்டாயா?


இங்குதான் எங்கோ மாட்டிக் கொண்டி ருக்கிறது ஜிம்மி. வெடிச் சத்தம் கேட்டு வேறு பல வீரர்கள் இங்கு வருவதற்குள் என் ஜிம்மியை மீட்டாக வேண்டும். டைகர் குரல் கொடு, சீக்கிரம். உன் குரல் கேட்டால் ஜிம்மி தான் இருக்குமிடத்தை அறிவிக்கும்.
பரபரப்புடன் பல சந்துகளில் புகு நாய் டைகரைக் கொண்டு குரல் தரச் சொல்ல ஓர் இடத்திலிருந்து ஜிம்மியின் முனகல் கேட்டது.
என் ஜிம்மியை எப்படியும் விடுவிப்பேன்
ரஹீமின் கைகள் பரபரப்புடன் இடிபாடுகளை அகற்றின. அவன் கைகளெல்லாம் காயம். ஆனாலும் பட்டபாட்டுக்குப் பலன் கிடைத்த போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை...
இரு நாய்களுக்குமே காயம். அதுவும் நல்லதுக்குத்தான். இப்போது அவைகளிடம் பகை மறைந்து விட்டது. பதுங்குமிடம் போனாலும் இரண்டுக்கும் மருந்து வைத்துக் கட்டிப் போட வேண்டும்.
இன்று எத்தனை ஆபத்து! இதிலும் பகைமை மறந்து அவ்விருவரும் ஒரு எலும்பை நட்போடு சுவைப்பது மனதுக்கு எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்தப் புத்தி பாகிஸ்தானியர்களுக்கு வரக் கூடாதா?



சோம்பேறிச் சுப்பன் சுகமாயிருக்கட்டும்!

வாண்டு மாமா

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே சுப்பன் என்று ஒரு சோம்பேறி இருந்தான். எந்த வேலையும் செய்ய மாட்டான். எப்போதும் கொட்டாவி விட்டபடி முடங்கிக் கிடப்பான் சுப்பன். அவனை ஊரார் 'சோத்துச் சுப்பன்', 'சோம்பேறிச் சுப்பன்' என்று கூப்பிடுவார்கள். அது மட்டுமா? தங்கள் குழந்தைகள் மச மசவென்று இருந்தாலோ, நன்றாகப் படிக்கா விட்டாலோ 'அந்தச் சுப்பனைப் போல் இருக்காதீர்கள்' என்று கூறுமளவுக்குச் சுப்பனின் சோம்பேறித்தனம் பிரபலமாகியிருந்தது.

பாவம், சுப்பனுடைய மனைவி! அவளை நினைத்து ஊரார் பரிதாபப் படலானார்கள். அவள் பெயர் சாரதா. சுப்பனைப் போல் இல்லாமல் அவள் உழைப்பாளியாகவும் புத்திசாலியாகவும் இருந்தாள். திடீரென்று ஒரு நாள் சுப்பன் பெரும் பணக்காரனாக, ஊரே புகழும் அறிவாளியானான். எப்படி? எல்லாம் அவன் மனைவி சாரதாவின் சாமர்த்தியத்தினால்தான். அப்படிச் சாரதா என்ன செய்தாள்? அதுதானே இந்தக் கதை.

சுப்பன் இருந்த நாட்டை ஒரு சுல்தான் ஆண்டு வந்தான். மொகலாயர் ஆட்சி நடந்த காலம் அது. ஆனால் இந்துக்களைத் துன்புறுத்தாத சுல்தான் இவர். வேலை வெட்டி இல்லாமல் இருந்தால் எப்படி வாழ்க்கை நடத்துவது? சாப்பாட்டுக்கு வழி? கொஞ்ச காலம் சாரதா எப்படியோ சமாளித்துக் கணவனுடைய பசியைத் தணித்து வந்தாள். ஆனால் அது எத்தனை நாளைக்கு நடக்கும்? சுப்பனை ஏதாவது வேலை செய்து சம்பாதித்து வருமாறு கூறினாள் சாரதா. அவன் உழைப்பாளி அல்ல என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே அவனுக்கு ஏற்ற எளிய வேலைகளையே அவள் செய்யுமாறு கூறினாள். அவனோ, ''ஐயோ, அதுவா, என்னால் ஆகாது!'' என்று கொட்டாவி விட்டான்.

''வீட்டில் மணி அரிசி இல்லை. எப்படியாவது ஏதாவது சம்பாதித்து வந்தால்தான் சாப்பாடு'' என்றாள் சாரதா ஒரு நாள்.

''சுப்பனுக்கு யார் வேலை கொடுப்பார்கள்? அப்படியே சுப்பன் வேலை செய்தாலும் அவனுக்குக் கூலி யார் கொடுப்பார்கள்?'' என்றான் அரைக்கண் மூடியபடி முடங்கிக் கிடந்த சுப்பன் கொஞ்சமும் வெட்கமில்லாமல். ''ஏதாவது மந்திரம் தந்திரம் தெரிந்தால்தான் சம்பாதிக்கலாம்'' என்றான் பெரிய உண்மையைச் சொல்பவனைப் போல.

கணவனின் பதில் சாரதாவின் உள்ளத்தில் ஒரு வெளிச்சத்தை ஏற்படுத்தியது. ''மந்திரம் தந்திரம்!'' என்று கூறிக் கொண்டவள், தந்திரத்தினால்தான் நம் தரித்திரம் போக வேண்டும் என்ற முடிவோடு, ''ஏன், நீங்கள் மந்திரக்காரராகவே மாறலாமே? வருங்காலத்தை, நடந்ததை, நடக்கப்போவதைக் கூறும் ஜோசியராகக் கூடாதா? உங்களுக்கு ஏற்ற தொழில்தான் அது. ஜோசியக்காரர்கள் என்ன செய்கிறார்கள்? ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு தங்களிடம் வருபவர்களுடைய ஜாதகத்தைப் பார்த்துப் புரியாத கணக்குகளையும் கோடுகளையும் போட்டு ஏதோ சொல்கிறார்கள். இல்லாவிட்டால் கைரேகையைப் பார்த்துக் குறி சொல்லுகிறார்கள். உழைப்பில்லாமல் சம்பாதிக்கலாம். இதை விட வேறு வழியே இல்லை. நாளைக்கே நீங்கள் உங்கள் தொழிலைப் பிரதான ரஸ்தாவில் உள்ள மரத்தடியில் ஆரம்பிக்கலாம்'' என்றாள்.

''ஜாதகத்தைப் பார்த்துக் கணக்குப் போட வேண்டுமா? எனக்கு ஒரு எழுத்தும் தெரியாதே'' என்றான் சுப்பன்.

''ஒரு எழுத்தும் தெரிய வேண்டாம். தலை எழுத்து சரியாக இருந்தால் இந்தத் தரணியையே வெற்றி கொள்ளலாம். போய் உட்காருங்கள்'' என்று முடுக்கினாள் மனைவி.

''என்னிடம் வருபவர்களுக்கு நான் என்னத்தைச் சொல்லுவேன்?'' என்றான் சுப்பன் பரிதாபமாக.

''எதையாவது சொல்லுங்கள், உங்கள் மனத்தில் தோன்றியதை'' என்று கூறித் தன் கணவனை மறுநாளே மரத்தடிக்கு வலுக்கட்டாயமாக அனுப்பி வைத்தாள் சாரதா.

குறி சொல்லும் ஜோசியக்காரனுக்குரிய உபகரணங்களுடன் சுப்பன் மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். காகிதம், இறகு பேனா, கரும்பலகை. முன்னால் பல அட்டைகள். ''ஆண்டவன் எனக்கு வருங் காலத்தைச் சொல்லும் திறனை அளித்திருக்கிறான். வாருங்கள், உங்கள் கால பலனை, அதிருஷ்டத்தைச் சொல்கிறேன்'' என்று கூவி அழைத்தான், வருவோர், போவோரை. சுப்பனை அறிந்த உள்ளூர்க்காரர்கள் சிரித்தபடியே போனார்கள். அவனை அறியாத அயலூர்வாசிகள் அவனிடம் வந்து தங்கள் குறைகளைத் தீர்க்க யோசனை கேட்டார்கள். வியாதி தீர, அடுத்த வீட்டுக்காரனைப் பழி வாங்க, கெட்டுப் போன பசு மாட்டைக் கண்டுபிடிக்க — இப்படிப் பல பிரச்னைகள் வந்தன சுப்பனிடம். சுப்பனும் தன் மனைவி சாரதாவிடம் கற்றுக் கொண்டபடி ஏதாவது சொல்லிச் சமாளித்து வந்தான். ஏதோ சுமாரான வருவாயும் வந்தது. சிரமமில்லாத வேலை. சுப்பனுக்கும் பிடித்திருந்தது. கணவன் உழைத்துக்(!) கொண்டு வரும் பணத்தில் சாரதாவும் சுவையான பதார்த்தங்களைப் பண்ணிப் போட்டாள் அவனுக்கு.

ஒரு நாள் சுப்பனிடம் அரண்மனையிலிருந்து ஒரு பெண் வந்தாள். அவனுடைய யோக காலம் ஆரம்பமாவதற்காகவே அவள் வந்தாளோ என்னவோ? சுல்தானின் அந்தப்புரத்துப் பணிப் பெண் அவள். இங்கும் அங்கும் பார்த்து விட்டு மெதுவான குரலில், ''ஐயா, ஜோசியரே! நான் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். அதிலிருந்து எப்படித் தப்புவது என்று தெரியாமல் தவிக்கிறேன். நீங்கள் தான் ஒரு வழி கூறி உதவ வேண்டும்'' என்றாள்.

''உன் சங்கடத்தைச் சொல். உதவ முடியுமா பார்க்கிறேன்'' என்றான் சோம்பேறிச் சுப்பன்.

''நான் ஒரு பொருளைத் திருடிவிட்டேன். வேண்டுமென்று செய்யவில்லை. போதாத காலம். புத்தி பேதலித்துவிட்டது. நான் சுல்தானின் மனைவியுடைய பணிப் பெண். ஒரு நாள் சுல்தானுடைய விலை உயர்ந்த வைர மோதிரம் குளிக்கும் அறையில் இருந்தது. ஆசை யாரை விட்டது? அதை எடுத்து ஒளித்துக் கொண்டேன். சுல்தான் அந்த மோதிரத்தைக் காணாமல் கோபமாக இருக்கிறார். திருடியவரைக் கண்டால் தலையை வாங்கி விடுவார். ஐயா



ஜோசியரே, கிரகங்களை ஆராய்ந்து சொல்லுங்கள். நான் அகப்பட்டுக் கொள்ளுவேனா?'' என்றான் அந்த அப்பாவிப் பெண்.

அது சாயந்திர வேளை. இன்னும் இருள் கவியவில்லை. இருந்தாலும் சுப்பன் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான்; நட்சத்திரங்களைக் கணக்கிடுபவன்போல. கறுப்பு அட்டை போட்ட ஒரு புத்தகத்தை விரித்து ஏதோ தேடுபவனைப் போல் பாவனை செய்தான். பிறகு கனைத்துக் கொண்டு, ''நிஜமாகவே உன்னை அபாயம் சூழ்ந்திருக்கிறது. எடுத்த மோதிரத்தை உடனே வைத்துவிடு. சுல்தானின் தர்பார் மண்டபத்தில் அழகுக்கு வைத்திருக்கிறதே இரண்டு பெரிய பீங்கான் ஜாடிகள்; அவைகளில் வலது கைப்பக்கமுள்ள ஜாடிக்குள் அந்த மோதிரத்தைப் போட்டுவிடு. இல்லாவிட்டால் உன் தலை தப்பாது'' என்றான். சில சமயங்களில் சுப்பன் கூடத் திறமையாகப் பேசுவான் போலிருக்கிறது!

பணிப் பெண் சுப்பனைப் பணிந்து, ஒரு பவுன் காசை அவன் பாதங்களில் வைத்துவிட்டுப் பரபரப்புடன் ஓடினாள் அவன் சொன்னபடி செய்ய.



வீட்டுக்கு வந்ததும் சுப்பன் தன் மனைவியிடம் பணிப் பெண்ணுக்குத்தான் கூறி சொன்ன கதையைக் கூறினான்.

சாரதா புத்திசாலி இல்லையா? அரண்மனைச் சமையல்காரரை அவளுக்குத் தெரியும். அவனிடம் போய் ''என் கணவர் கிரகங்களின் போக்கை அறிந்தவர். அவருக்குத் தெரியாத ரகசியமே கிடையாது. சுல்தானின் வைர மோதிரம் இருக்கும் இடத்தை இவரால் கண்டுபிடித்துக் கொடுக்க முடியும்'' என்று கூறினாள். செய்தி சுல்தான் காது வரை போயிற்று. சுப்பனுக்கு அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது. தர்பார் ஹாலுக்குப் போனவன், தன்னுடைய கறுப்பு அட்டை போட்ட நோட்டைத் திறந்து எதையோ தேடினான். வேறொன்றுமில்லை. இரண்டு ஜாடிகளுள் எது வலது, எது இடது என்பது அவனுக்குத் தெரியவில்லை! குழப்பம். சற்று யோசித்துவிட்டு, ''அரசே! கிரகங்களின் கூற்றுப்படி உங்கள் மோதிரம் இதோ இந்த இரண்டு ஜாடிகளுள் ஒன்றில் இருக்க வேண்டும்'' என்றான். சோதனையில் அவன் சொன்னபடி மோதிரம் கிடைத்தது. சுப்பன் பொற்கிழியும் பூரித்த உள்ளமுமாக வீடு திரும்பினான்.

இதோடு விட்டதா? அடுத்து அரண்மனையில் இன்னொரு பெரிய திருட்டு நடந்தது. இந்தத் தடவை நகைகள், வைரங்கள் நிறைந்த ஒரு பெட்டியே காணாமல் போய்விட்டது.

''என் மோதிரத்தைக் கண்டுபிடித்துச் சொன்னது போல இதையும் அறிந்து சொல்லு'' என்றார் சுல்தான், தம் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சுப்பனிடம். பாவம், சுப்பன் என்ன செய்வான்? ''அரசே! இது பெரிய திருட்டு. ஆகவே எனக்கு நாற்பது நாட்கள் அவகாசம் வேண்டும்'' என்று கேட்டான்; அதற்குள் ஏதாவது வழி பிறக்காதா என்ற நம்பிக்கையில்.

'' சரி. ஆனால் நாற்பத்தோராவது நாள் என் நகைப் பெட்டி வரவில்லையானால் உன்னைப் பாலைவனத்துக்கு விரட்டி விடுவேன்'' என்றார் சுல்தான்.

நடந்ததை மனைவி சாரதாவிடம் சொல்ல வேகமாக நடந்தான் சுப்பன்.

இந்த நகைப் பெட்டியைத் திருடியது அலிபாபா கதையில் வரும் திருடர்களைப் போல நாற்பது பேர்களைக் கொண்ட ஒரு கொள்ளைக் கூட்டம். ஏதோ குருட்டாம்போக்கில் சுப்பன் தவணை கேட்டதும் இதே நாற்பது நாட்கள்தான்.

அதிர்ஷ்டம் வரும்போது இப்படித்தான் வரும்போலிருக்கிறது. சுல்தான்சுப்பனைக் கூப்பிட்டுக் கேட்டதும் அவன் நாற்பது நாள் தவணை கேட்ட தகவலும் திருடர்களுக்கு எட்டியது. சுப்பன் வைர மோதிரத்தைக் கண்டுபிடித்த விஷயமும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ''ஒரு வேளை கிரகங்களின் ரகசியம் தெரிந்தவனாக இருந்தாலும் இருக்கலாம். இந்தத் திருட்டை நடத்தியது யார் என்று அவன் கண்டுபிடித்தும் விடலாம். எதற்கும் நம்மில் ஒருவர் அவன் வீட்டுப் பக்கம் போய் ஜன்னல் வழியாக என்ன செய்கிறான் என்பதைப் பார்த்து வருவது நல்லது'' என்றான் திருடர் தலைவன். உடனே ஒருவனை அனுப்பியும்விட்டான்.

அப்பாவிச் சுப்பன் தன் மனைவியிடம் அரண்மனையில் நடந்ததைக் கூறிக் கொண்டிருந்தான். ''ஓ, சாரதா! நாற்பதில் ஒண்ணு இன்னிக்கு வந்திருக்கு..'' என்றான். உளவறிய வந்த திருடனுக்கு உதறல் எடுத்தது. அதற்கு மேல் அங்கு நிற்பானா? எடுத்தான் ஓட்டம். நாற்பதில் ஒன்று என்றது தன்னைத்தான் என்று திருடன் நினைத்ததில் வியப்பில்லை. ஆனால் சுப்பனோ நாற்பது நாள் தவணையில் இன்று முதல் நாள் என்பதையே அப்படிக் குறிப்பிட்டான்.

திருடன் போய்த் தன் கூட்டாளிகளிடம் நடந்ததை விவரித்தான்: ''அந்த ஜோசியர் ரொம்பப் பெரிய ஆளு. சந்தேகமே யில்லை. நகைப் பெட்டியைத் திருடியது நாம்தான் என்று எவ்வளவு சூசகமாகச் சொல்லி விட்டார்! அதுமட்டுமா? நாற்பதில் ஒண்ணு வந்திருக்கு என்றும் என்னைப் பார்க்காமலே கூறினாரே!'' என்று கலங்கிப்போய்ச் சொன்னான் அவன். மற்றவர்களுக்கும் பயம் பிடித்துக் கொண்டது. இருந்தாலும் உறுதிப்படுத்திக் கொள்ள மறுநாள் மாலையே இன்னொருவனை அனுப்பினார்கள்.

அவன் வந்து ஜன்னலருகே ஒளிந்திருந்தபோது சுப்பன் தன் மனைவியிடம் கூறினான்: ''சாரதா! நாற்பதில் ஒன்று நேற்று வந்து போயிற்று. இன்று வந்துள்ள இரண்டாவதும் போகப் போகிறது'' என்று பெருமூச்சு விட்டான். அவன் குறிப்பிட்டது இரண்டாவது நாளை. திருடன் நினைத்ததோ 'இரண்டாவது ஆளை' என்று. விழுந்தடித்துக் கொண்டு ஓடினான் அவன் திருடர் தலைவனிடம்.

'சுப்பனுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. உடனே நாம் போய் அவரிடம் சரணடைவதுதான் புத்திசாலித்தனம். கொள்ளையில் கொஞ்சம் கொடுத்தாவது அவர் அன்பைப் பெற்றால்தான் பிழைத்தோம்' என்ற முடிவோடு திருடர்கள் ஓடி வந்தார்கள் சுப்பனிடம். சோம்பேறிச் சுப்பனின் காலில் விழுந்து தங்களைக் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சினார்கள்.

சுப்பன் இப்போதெல்லாம் அசடாகக் கொட்டாவி விடுவதில்லை. சாரதாவின் பயிற்சி அவனை ரொம்ப மாற்றியிருந்தது.

''சுல்தானிடம் நகைப் பெட்டியைத் திருடியது யார் என்று நான் கூறவில்லை. நகைப் பெட்டியை நீங்கள் மறைத்து வைத்துள்ள இடத்துக்கு நான் அவரைக் கூட்டி வரும்போது அதில் இருந்தது இருந்தபடியே கிடைக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் அவரிடம் உங்கள் நாற்பது பேரையும் காட்டிக் கொடுத்துவிடுவேன்'' என்றான் சுப்பன். திருடர் தலைவன் தப்பினால் போதும் என்று நகர எல்லைக்கு அப்பாலிருந்த புதரில் பெட்டி ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் கூறிவிட்டு ஓட்டம் எடுத்தான்.

சுல்தான் இந்தத் தடவை சுப்பனுக்கு ஒரு பெரிய அரண்மனையையே கட்டிக் கொடுத்தார். ஏராளமான தங்க மொகராக்களை வேறு பரிசாக அளித்தார். 'அதிர்ஷ்டம் வந்தால், சுப்பனுக்கு வந்தது போலல்லவா வர வேண்டும்' என்று ஊராரெல்லாம் பேசிக் கொண்டார்கள்!

அதிர்ஷ்டத்தைத் தொடர்ந்து ஆபத்தும் வந்தது சுப்பனுக்கு. அவனுடைய திறமையை உண்மை என்று நம்பிய சுல்தான் அவனை வெகுவாகப் புகழலானார். ஒரு சமயம் சுல்தானைக் காண அடுத்த தேசத்து ராஜா வந்திருந்தார். அவரிடம் சுப்பனின் மகத்தான சாதனைகளைக் கூறிவிட்டு, ''இதோ நீங்களே பாருங்கள். மூடிய என் கைக்குள் என்ன இருக்கிறது என்பதைச் சொல்லச் சொல்லுகிறேன்'' என்று தம் மூடிய இடது கையைச் சுப்பன் முன் நீட்டி, ''சோதிடப்புலி சுப்பரே! சொல்லுங்கள், என் கைக்குள் இருப்பதை. இவர்கள் அதைக் கேட்டு வியப்படையட்டும்'' என்றார் சுல்தான்.

பாவம்! சுப்பன் திருதிருவென்று விழித்தான். இம்மாதிரி இக்கட்டான நிலை வரும்போதெல்லாம் தன் மனைவி சாரதாவைத்தான் நினைத்துக் கொள்வது வழக்கம். இப்போதும் இப்படித்தான் எண்ணினான். 'என் அறிவுள்ள மனைவி அருகே இருக்கக் கூடாதா என்று? தான் ஏதாவது உளறினால் விருந்தாளிகள் முன்னிலையில் சுல்தானின் கௌரவம் பாதிக்கப்படும். தனக்குக் கொடுத்துள்ள சீரும் சிறப்பும் செல்

வாக்கும் விடும் வாசலும் பிடுங்கப்படும். தன்னைப் பாலைவனத்துக்கு விரட்டிப் பசியாலும் தாகத்தாலும் சாகடிப் பார்கள்! இப்படியெல்லாம் நினைக் கவே சுப்பனுக்குக் கண் இருண்டது. நாக்கு உலர்ந்தது. எங்கிருக்கிறோம், என்ன பேசுகிறோம் என்பதை மறந்து, ''ஜாரதா...ஜாரதா! சரியாகச் சிக்கிக் கொண்டாயா!'' என்று குழறினான் சுப்பன். அவன் தன் மனைவியை உதவிக் குக் கூப்பிடத்தான் நினைத்தான். ஆனால் பயத்தில் நாக்குத் தடுமாற 'சாரதா' என்பதற்குப் பதில் 'ஜாரதா' என்றும் 'சிக்கிக் கொண்டேனே' என்பதற்குப் பதிலாகக் 'கொண்டாயா' என்று குழறி விட்டான். ஆனால் அதிர்ஷ்ட தேவதை யின் பூரண அருள் இருக்கும்போது எல் லாமே நன்மையாகத்தானே முடியும்!

சுல்தான் மூடிய தம் கையைத் திறந்து காட்டினார். அதிலிருந்து ஒரு வெட்டுக்கிளி பறந்து ஓடியது. சூழ்ந் திருந்தவர்கள், ''ஆஹாஹா! அற் புதம், அதிசயம்!'' என்று வியந்து போய்ச் சுப்பனைப் பயபக்தியோடு பார்த்தார்கள். புராதன அரபு மொழி யில் ஜாரதா என்றால் வெட்டுக்கிளி என்று பொருள்! சுப்பனின் கௌரவம் எப்படி உயர்ந்திருக்கும் என்று எண் ணிப் பாருங்கள்.

ஆனால் அவன் தன் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான். ''இதோ பார் சாரதா, ஆண்டவன் இந்தத் தடவையும் என்னைக் காப்பாற்றிவிட் டார். ஆனால் இனிமேல் என்னால் அறி வாளியைப் போல் போலி வாழ்க்கை வாழ முடியாது. நான் சுல்தானிடம் போய் உண்மையை ஒப்புக் கொண்டு விடப் போகிறேன்'' என்றான்.

''அதனால் என்ன நன்மை? உண் மையை அறிந்தால் அவர் தம்மை ஏமாற்றியதற்காக வீடு, நம் சொத்து சுகங்களைப் பறித்துக்கொண்டு உங்களைப் பாலைவனத்துக்கு விரட்டிவிடத்தான் போகிறார். வேறு ஏதாவது உபாயம் காண்போம்'' என்றாள் சாரதா. விரை வில் ஒரு வழியையும் கண்டுபிடித்து விட்டாள் அவள். உண்மையிலேயே புத்திசாலியாயிற்றே!

''சுல்தானிடம் போய் இப்படிச் சொல்லுங்கள். 'ஆண்டவனுக்கு என் மீது ஏதோ கோபம். நான் நோய் வாய்ப்பட்டுவிட்டேன். முக்காலங்களை அறிந்து சொல்லும் ஆற்றலும் என் னிடமிருந்து போய்விட்டது' என்று. அவரும் இனிமேல் உங்கள் திறமை யைப் பலர் முன்னிலையில் சோதிக்கமாட் டார்'' என்றாள்.

அதன்படியே ஒரு பணியாளனிடம் தன் கணவனின் நிலையைக் கூறிச் சுல்தானிடம் அனுப்பினாள் சாரதா. ஆனால் சுல்தான் இதை நம்பவில்லை. சுப்பனைதான் நேரில் பார்க்க வேண் டும் என்று கூறி அழைத்து வர ஆட்களை யும் அனுப்பிவிட்டார். சுப்பனின்பாடு சங்கடமாயிற்று. ஆனால் சாரதா மனந் தளரவில்லை. கணவனின் உடைகளைத் தாறுமாறாகக் கிழித்தாள். பிறகு பைத் தியத்தைப் போல் நடந்து கொள்ளும் படி வழிமுறைகளைக் கூறி அரண்மனைக்கு அனுப்பினாள். மனைவியின் பயிற்சியி னால் இப்போது சுப்பன் ரொம்ப முன் னேறியிருந்தான். ஆகவே, பைத்தியக் காரனைப் போலவே நடிக்கலானான். பித்தனைப் போல, சுல்தானை அவர் உட் கார்ந்திருந்த இருக்கையிலிருந்து ஒரு கையைப் பிடித்துத் தரதரவென்று வெளியே இழுத்துக் கொண்டு ஓடி னான் சுப்பன். சூழ்ந்திருந்தவர்கள் செய்வதறியாது திகைத்துப் போய்ப் பின்தொடர்ந்தார்கள்.

அதே சமயம் சுல்தான் உட்கார்ந் திருந்த மண்டபத்து விதானம் அப் படியே இடிந்து இடியோசையோடு நொறுங்கி விழுந்தது. சுல்தானுக்கு எத்தனையோ விரோதிகள். அவர் களில் யாரோ ஒருவன் அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்தான். மண்ட பத்துக்கு வெளியே சுப்பனால் இழுத்து வரப்பட்ட சுல்தானும் மற்றவர்களும் இக்பிரமை பிடித்துப் போய் நின் றார்கள். 'அங்கு இருந்திருந்தால் தங்கள் கதிஎன்னாகி இருக்கும்?' என்பதை அவர்க ளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

''அல்லா இந்த மனிதன் மூலம் நம்மைக் காப்பாற்றி யிருக்கிறார். முக்காலங்களை உணரும் சக்தி இவ னிடமிருந்து போனாலும்கூட நம்மை யெல்லாம்விட அறிவாளி இவன். இன்று நம் உயிரையெல்லாம் காப்பாற்றியிருக் கிறானே. நான் கட்டிக் கொடுத்த அரண்மனையில் இவன் அமைதியாக வாழட்டும். இவன் வியாதியைக் குண மாக்க நமது வைத்தியர்களை அனுப்பு வோம். இனி யாரும் சுப்பனிடம் போய் எதைப் பற்றியும் கேட்கக் கூடாது. இனி அவன் தன் வாழ்நாள் முழுவதும் அமைதியாகக் கழிக்கட்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாம் செய்து தருவோம்'' என்றார் சுல்தான்.

இப்படியாகத்தானே சோம்பேறிச் சுப்பன் தன் மனைவியின் சமயோசித புத்திசாலித்தனத்தினால் குபேர சம்பத் துக்களுடன், முன்போலவே கொட் டாவி விட்டுக்கொண்டு, உண்டு உறங்கி உல்லாசமாக வாழ்ந்து வரலானான்!




சிரிக்கச் சிரிக்க...

சாமா




''யாரு? பார்த்த மாதிரி இருக்கே!''

''சித்த முன்னடி தானே வட அமெரிக்காவிலே நாம் சந்திச்சோம்!''




''ஐயோ பாவம்! வருத்தப் படாதே! முள்ளம் பன்றி பலூன் வியாபாரம் பண்ணினதும் நஷ்டம் வராமல் வேறு என்ன நடக்கும்?''





''எப்படிடா உங்கப் பாவிடம் உன் பிராகரஸ் ரிப்போர்ட்டிலே கையெழுத்து வாங்கி விட்டாய்?''

''என் பிராகரஸ் ரிப்போர்ட்டை அவர் ஆபீஸ் 'பைலோ'டு சேர்த்து வைச்சுக் கட்டிவிட்டேன். அவர் கண்ணை மூடியபடி கை யெழுத்துப் போட்டு விட்டார்!''



ஆடிப் பெருக்கு


என். ராமகிருஷ்ணா



காவிரிக் கரையில் வாழ்பவர்களுக்கும் காவிரி நதி ஓடும் ஊர்களில் பிறந்தவர்களுக்கும் ஆடிப் பதினெட்டைப் பற்றித் தெரியும். கடந்த வாரம் அதைக் கோலாகலமாகக் கொண்டாடியிருப்பார்கள். ஆடிப் பெருக்கு பற்றி இந்த நாகரிக உலகில் அநேகம் பேருக்குத் தெரியாது.

ஆதிகாலம் தொட்டு நம் நாட்டில் நதிகளைத் தெய்வங்களாக வழிபட்டு வருகிறார்கள். ஆடி மாதத்தில் தமிழ் நாட்டில் நதியானது இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு நுங்கும் நுரையுமாக நிரம்பச் செல்வதை ஆடிப்பெருக்கு என்று கூறுகிறோம். இதைப் பதினெட்டாம் பெருக்கு என்று வழங்கி ஆடி மாதம் 18ந் தேதியன்று ஒரு விழாவாகவே கொண்டாடுகிறோம்.

காவிரி நதி பாயும் தென்னாட்டில் இவ்விழா மிகவும் பிரசித்தம். வெள்ளம் கரை புரண்



டோடிப் படிகளையெல்லாம் மூடிக்கொண்டுவிடும். தஞ்சை திருச்சி மாவட்டங்களில் இது கண்கொள்ளாக் காட்சி. அணைக்கட்டுகள் கட்டப்படாத காலத்தில் ஆடிப்பெருக்கு கட்டுக்கு அடங்காது. காவிரியினால் செல்வம் பெற்ற மாவட்டங்கள் இவை இரண்டும். பாரதத்தில் உள்ள ஒன்பது புண்ணிய நதிகளில் காவிரியும் ஒன்று.

நாகரிகம் மிகுந்துவிட்ட இக்காலத்தில் பலருக்கு ஆடிப் பதினெட்டு புதுமையாக இருக்கலாம். ஆனால் தமிழகத்துக்கு இவ்விழா புதிதல்ல. பண்டைக் காலம் தொட்டு வழங்கிவருவதே. இது பெண்களுக்கு முக்கியமான விழா. அவர்கள் புத்தாடை உடுத்து, அழகாக ஆபரணங்கள் பூண்டு, பலவிதமான இனிப்புப் பண்டங்கள் தயாரித்து, காவிரித் தாயை வழிபட்டு அவளுக்கு நிவேதனம் செய்வார்கள். புராணங்களிலும் பண்டைத் தமிழ் நூல்களிலும் ஆடிப் பெருக்கு பற்றிய விவரம் உள்ளது. இலக்கியங்களில் இதை நீர் விழா, நீராட்டு, புனலாட்டு என்றும் கூறப்பட்டுள்ளது. பரிபாடலில் பல செய்யுள்கள் உள்ளன.

காவிரியானது நீர் நிறைந்து முழுமூச்சுடன் ஓடும்போது அதைச் சூல் கொண்ட மங்கைக்கு ஒப்பிடுகிறார்கள். கருவுற்றிருக்கும் பெண் பலவிதமான தின்பண்டங்களைச் சாப்பிட ஆசைப்படுவாள். ஆகையால் காவிரி அன்னைக்குப் பலவிதமான பலகாரங்கள் செய்து ஆற்றில் போடுவார்கள். புளி சாதம், தேங்காய் சாதம், எலுமிச்சம் பழச் சாதம், அப்பளாம், வடாம் முதலியன சிறப்பானவை.

குழந்தைகள் இவ்விழாவை மிகவும் ஆர்வத்துடன் கொண்டாடுவார்கள். சப்பரங்கள் கட்டி அவைகளில் தெய்வ உருவங்களின் படங்களை வைத்து இழுத்துச் செல்வார்கள். அழகான முகப்பும் நீண்ட கோபுரமும், வண்ண வண்ணக் காகிதங்களும் இத்தேர்களை அலங்கரிக்கும். வாலிபர்கள் தங்கள்

வலிமையைக் காட்ட உயர்ந்த மரங்களிலிருந்தும் கோபுரங்களிலிருந்தும் பாலங்களின் மீதிருந்தும் காவிரியாற்றில் குதித்துப் பெருவெள்ளத்தில், எதிர் நீச்சல் போட்டு மறுகரை செல்வார்கள்.

இவ்விழா சம்பந்தமான பூஜைகள் பலவித மானவை. காவிரிக் கரையில் இல்லாத மக்கள் அவர்கள் ஊரில் உள்ள குளக் கரையில் இதைக் கொண்டாடுவார்கள். சில இடங்களில் மண்ணில் காவிரி அம்மன் போல் உருவம் செய்து அதற்கு மஞ்சள் குங்குமம் இட்டு பூஜை செய்வார்கள். காப்பரிசி செய்து நிவேதனம் செய்வார்கள்.

பெண்கள் மணிக்கட்டில் மஞ்சள் கயிறு பூணுவார்கள். சில ஊர்களில் இவ்விழாவன்று புது மங்கள சூத்திரத்தைக் கட்டிக் கொள்வார்கள். மற்றும் வளையல்கள், கருகுமணிகள், தேங்காய் முதலியவற்றை ஆற்றில் தூக்கிப் போடுவார்கள். மாப்பிள்ளைமார்களை அழைத்து விசேஷ விருந்து வைப்பார்கள்.

சிலர் இவ்விழாவன்று ஆற்றில் மூழ்கிப் பின்பு பாலும் புஷ்பமும் அதில் போடுவார்கள். சித்ரான்னங்களை எடுத்துச் சென்று, காவிரித் தாய்க்குப் படைத்துக் கொஞ்சம் ஆற்றில் போட்டு மிகுந்ததை உண்பார்கள். கோவில்களில் உள்ள பெண் தெய்வங்களுக்கு ஆராதனை நடக்கும். பின்பு வீதி உலா உண்டு. அவை காவிரி ஆற்றங்கரையில் உள்ள மண்டபத்தில் வைக்கப்படும்.

இவ்விழாவைக் கர்னாடகத்தில் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். மைசூரில் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படும் விழா இது. காவிரிக்கு அங்கேயே பூஜை செய்வார்கள். சிறு அகல் விளக்குகளை ஏற்றி நதியில் மிதக்க விடுவார்கள். காவிரித் தாயை வணங்கித் தங்களையும் தங்கள் ஊராரையும் வெள்ள பயத்திலிருந்து காப்பாற்றித் தங்களுடைய விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்று வேண்டுவார்கள்.

காவிரி நதிக்கரைப் பக்கமுள்ள ஓர் ஊருக்கு இச்சமயத்தில் போய்ப் பார்த்தால் இவ்விழாவின் ஆழ்ந்த கருத்தை ரசித்து மகிழலாம்.

புகைப்பட விளக்கம் :

முதல் பக்கத்தில் —

இடது படம் : காவிரிக் கரையில் பெண்மணிகள் சித்திரான்னங்கள் சாப்பிட்டு மகிழ்தல்.

வலது படம் : குழந்தை, பெரியவர்களின் குதூகல நன்னாள்.

இந்தப் பக்கத்தில் —

கீழே உள்ள படங்கள் :


ஆற்றிலே நீந்திக் களித்தல்.

ஆடிப் பெருக்கின்போது கட்டப்படும் சப்பரத்தைத் தாங்கியபடி மகிழ்ச்சியோடு காணப்படும் குழந்தைகள்.








பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
பாலு, நான் ஸ்டேஷனுக்குப் போயிட்டு வரேன். உன் அத்தை வராளாம். அழைத்துக்கொண்டு வரணும். நீ வீட்டை ஜாக்கிரதையாப் பாத்துக்கணும், என்ன?
சரிம்மா, சீனுவும் நானும் விளையாடிண்டு இருக்கோம்.
வாடா, சீனு. நாம் ஜாலியா விளையாடலாம்.
சண்டையில்லாமல் விளையாடிண்டிருக்கணும். தெரிஞ்சுதா?
சற்றைக்கெல்லாம்.
டேய், பாலு! உன் சண்டைக் கப்பலை என் டார்பிடோக்கப்பல் இப்போ குண்டு போட்டு மூழ்கடிக்கப் போகுது பார்.
ஓ! அப்படியா நீ நெனச்சிட்டிருக்கே?
என் துறைமுகப் பீரங்கிகள் உன் டார்பிடோக் கப்பலைத் தவிடு பொடியாக்குது பார்.
ஏய்..ய்..
அப்படியா, சமாசாரம்? இந்த முறையிலே ஆரம்பிச்சுட்டியா?
இது எப்படி இருக்கு? கடல் கொந்தளிப்புன்னு பேரு இதுக்கு, நீ பார்த்திருக்க மாட்டே.
சீனுப் பயல் என்னைக் குளிப்பாட்டிட்டான். அவனையும் நான் முழுக்காட்டணும்.


டேய், சீனு! இது உன்னை என்ன செய்யுது பார். என்னோட ரகசிய ஆயுதமாக்கும் இது!
அடடா! என் குறியிலிருந்து தப்பிவிட்டானே பயல்.
பா...வு...!
உங்கப்பா வர வரைக்கும் ரெண்டு பேரும் இந்த அறையிலேயே இருங்க.
சிறிது நேரங்கழித்து
அத்தே, ரொம்பத் தாகமா இருக்கு. ஒரு தம்ளர் ஜலம் கொடுக்கறியா, குடிக்க....
ரொம்ப "தாங்ஸ்" அத்தை!
ஏண்டா, பாத்ரூமிலே உன்னைக் குளிப்பாட்டினேனே, அது போறல்லியா? சரியான எருமைடா நீ!
நீ என்னைக் குளிப்பாட்டினது உண்மைதாண்டா. இந்தத் தண்ணீர் நான் குடிப்பதற்காக இல்லே. உன்னைக் குளிப்பாட்டத் தாண்டா, நீர் யானைப் பயலே! எப்படிக் குறுகுறுன்னு இருக்கா?

நவக்கிரக நாயகர்கள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)



வீனஸ்

அழகின் அதிதேவதை. கடல் நுரையிலிருந்து தோன்றியவள். கடல் அலைகளால் ஒலிம்பஸ் மலைக்குச் சுமந்து செல்லப்பட்டாள். தன் அழகாலும் வனப்பாலும் எல்லோரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டாள். வீனஸ் தன் இடையில் ஓர் ஒட்டியாணம் அணிந்திருப்பாள். இது மந்திர சக்தி வாய்ந்தது. இதை அணிந்திருப்பவர் யாரானாலும் அவர்களிடம் எல்லோரும் அன்பு செலுத்துவார்கள். இந்த இடைக்கச்சைக்கு அப்படி ஒரு மகிமை. வீனஸ் தான் விரும்புபவர்களுக்கு இந்த மந்திர ஒட்டியாணத்தை இரவல் தருவதும் உண்டு.

ஆடு மேய்க்கும் இளைஞனும் அழகனுமான பாரிஸிடம் தங்க ஆப்பிள் பழம் ஒன்று இருந்தது. இதை வீனஸ் விரும்பினாள். அதை அவளுக்குத் தருவதானால் தனக்கு உலகிலேயே அழகியான ஒரு பெண்ணை மனைவியாக்கி வைக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்தான் பாரிஸ். அந்த அழகி டிராய் நகரத்து ஹெலன். பாரிஸ் ஹெலனை மெனலாஸிடமிருந்து கவர்ந்து சென்றான். இதனால் ஏற்பட்டது தான் புகழ்பெற்ற ட்ரோஜன் யுத்தம்.

அடோனிஸின் தாய் வீனஸ். அடோனிஸ் ஒரு சமயம் வேட்டை ஆடிக் கொண்டிருக்கும் போது காட்டுப் பன்றியால் தாக்கப்பட்டுக் கொல்லப் பட்டான். மகனை இழந்த வேதனையில் வீனஸ் பித்துப் பிடித்தவளைப்போலானாள். வீனஸின் வேதனையைக் கண்டு தாங்காத பெர்ஸபோனி அவளது மறைந்த மகன் ஆடோனிஸ் ஆண்டில் சில மாதங்கள் அவளுடன் வந்து தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தாள். வீனஸின் துக்கமும் கொஞ்சம் குறைந்தது.

வீனஸின் இன்னொரு மகனின் பெயர் கூபிட். காதலின் அதிதேவதை. (நம் புராணத்தில் வரும் மன்மதனைப் போல்) வீனஸ் தன் ரதத்திலேறி வானுலகில் பவனி வருவாள். அந்த ரதத்தை வெண் புருக்களும் சிட்டுக் குருவிகளும் இழுத்து வரும். இந்தப் பவனியின் போது கூபிட் தாயுடன் செல்வது வழக்கம். தான் அன்பு செலுத்துபவர்களைத் தனக்குக் கட்டுப்பட்டவர்களாகக் கருதுவது வீனஸின் குணம். அவர்கள் அவள் விருப்பத்துக்கு மாறாக ஏதாவது செய்தால் அவளுக்குக் கோபம் வரும். கூபிட் ஒரு பெண்ணின் மீது காதல் கொண்டு அவளை மணந்து கொண்டுவிட்டான், தாயின் சம்மதமின்றியே. இதனால் நெடுங்காலம் வரை அந்த இளம் தம்பதிகளின் மீது வீனஸ் கோபங் கொண்டிருந்தாள்.

ஜூபிடர்

கடவுளர்களுக்கெல்லாம் கடவுள் ஜூபிடர். இவருக்கு மூன்று மனைவிகள். பல குழந்தைகள். முதல் மனைவியின் பெயர் மெடிஸ்—அறிவின் அதிதேவதை. இரண்டாவது மனைவியின் பெயர் தெமிஸ் — நீதியின் அதிதேவதை. மூன்றாவது மனைவி வானுலகின் வடிவழகி ஜூனோ. ஜூபிடரின் குழந்தைகளில் முக்கியமானவர்கள் : மார்ஸ், பெர்சியஸ், டியானா, அப்போலோ, ஹெர்குலிஸ், மெர்க்குரி ஆகியோர்.

ஒரு சமயம் ஜூபிடர் மெர்க்குரியுடன் ரைஜியா நகரத்துக்குச் சென்றார். நல்லிதயம் படைத்த மனிதர்



களைக் காண்பதற்காக. இவ்விரு கடவுளர்களுக்கும் அந்நகரத்தில் இரண்டே இரண்டு ஆத்மாக்கள்தான் அன்பு காட்டின. அவர்கள் கிழட்டுத் தம்பதிகள். பிலமான், பாஸிஸ் என்பது அவர்கள் பெயர். தங்களுக்காக வைத்திருந்த எளிய உணவை இவ்விருவருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்ந்தார்கள் அந்தக் கிழட்டுத் தம்பதிகள்.

இந்த அன்புக்கு ஈடாக ஜூபிடர் அவர்களுடைய எளிய குடிசையை அற்புதமான அரண்மனையாக்கித் தந்தார். அந்த அரண்மனையிலிருந்த படி பிலமானும் பாஸிஸும் தினமும் ஜூபிடருக்குப் பூசனை புரிந்து அவ்வழி வரும் வழிப்போக்கர்களை அன்புடன் உபசரணை செய்து வாழ்ந்து வந்தார்கள்.

அவ்விருவரும் நகமும் சதையும் போல் அத்தனை அன்போடு இல்லறம் நடத்துவதைக் கண்ட ஜூபிடர் அவர்களுடைய பூவுலக வாழ்வு முடியும் சமயத்தில் அவ்விருவரையும் லிண்டன் மரமாகவும் ஓக் மரமாகவும் மாற்றினார். அவ்விரு மரங்களும் பூவுலகில் செழித்து வளர்ந்து பூத்துக் குலுங்கி நிலைத்து வாழ்ந்து வருகின்றன.

மெர்க்குரி

கடவுளர்களின் தூதுவன் மெர்க்குரி. கிரேக்கர்கள் இவரை ஹெர்குலிஸ் என்றும் அழைப்பார்கள். பல்வேறு காரியங்களுக்கு மெர்க்குரியை ஜூபிடர் அனுப்புவார். மெர்க்குரியுடைய தாயாரின் பெயர் மையா. அட்லாஸினுடைய அழகிய பெண் மையா. மெர்க்குரியின் மகன் பான். அவன் இசைக்கும் குழல் இனிமையில் எல்லாரும் சொக்கிப் போவார்கள். மெர்க்குரிக்குச் சங்கீதம் என்றால் உயிர். ஒரு சமயம் சூரியக் கடவுளுக்கு லயர் என்ற இசைக் கருவியைச் செய்து கொடுத்தார் மெர்க்குரி. இதனால் மகிழ்ந்த அப்போலோ மெர்க்குரிக்கு ஒரு மந்திரக்கோலைப் பரிசாகக் கொடுத்தார். இந்த மந்திரக்கோல் எந்தப் பொருளையும் சொக்கத் தங்கமாக மாற்றக்கூடிய சக்தி படைத்தது. இதைக் கொண்டு மெர்க்குரி இறந்துவிட்ட, உயிர் வாழும் ஆத்மாக்களை ஆட்டிப் படைக்கிறார். இந்த மந்திரக் கோலைப் பாம்பு சுற்றிக்கொண்டிருக்கும். அதன் உச்சியில் இரு இறக்கைகள் இருக்கும். மெர்க்குரியின் இரு பாதங்களிலும்



கூட இறக்கைகள் உண்டு. மருத்துவத்துக்கு உரிய சின்னமாக இந்தக் காலத்தில் மெர்க்குரியின் மந்திரக்கோலைக் குறிப்பிடுகிறார்கள்.

பெர்ஸபோனியை அவளது தாயாரிடம் சேர்ப்பித்தது மெர்க்குரியின் முயற்சியினால்தான்.

- கிருஷ்ணவேணி



‘கோகுல’த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு - ‘கல்கி’ அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

:ரியான வேளையில் சரியான வேலை...





everest/122d/PP Ta